Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49 — மலர் 10
போன் 389 — இதழ் 165
National Tamil Daily — தேசிய தினசரி

யாழ்ப்பாணம் சோக ஆடி 10 ரபி: ஆகிர் 28 வியாழக்கிழமை (25-7-68)

ஈழநாடு சந்தா

| | | |
|---|---|---|
| மூன்று மாதம் | — | ரூ. 14-00 |
| ஆறு மாதம் | — | ரூ. 26-00 |
| ஒரு வருடம் | — | ரூ. 50-00 |

வாரப்பதிப்பு மாத்திரம்

| | | |
|---|---|---|
| மூன்று மாதம் | — | ரூ. 4-00 |
| ஆறு மாதம் | — | ரூ. 7-50 |
| ஒரு வருடம் | — | ரூ. 14-00 |

முற்பணம் கட்டவேண்டும். தபால் மூலம் அல்லது ஆள் மூலம் அனுப்பப்படும்.

# மாவை தேர் உற்சவம் அமைதியாக நடைபெற்றது

## தடைகள் நீக்கப்பட்டன

## ஆயிரக்கணக்கான பக்தர்கள் வழமைபோல் தரிசித்தனர்

யாழ்ப்பாணம், வியாழன்

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் ரதோற்சவத்தில் நேற்று ஆயிரக் கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டனர். காலை 9 மணியள வில் புறப்பட்ட ரதம், நண்பகல் 12 மணிக்கு நிலையத்தை வந் தடைந்தது. முதலாவது தேரில் விநாயகப்பெருமானும், இரண் டாவது தேரில் சிவனும், மூன்றாவது தேரில் வள்ளி தெய் வானை சமேதம் சுப்பிரமணியரும், நான்காவது தேரில் ஆறுமுக சுவாமியும், ஐந்தாவது தேரில் சண்டேஸ்வரரும் எழுந்தருளி னார்கள்.

கோயில் வீதிகளில் நேற்றுப் பொலிஸார் மிகவும் குறைவாகவே காணப்பட்டார்கள். கோயிலின் மேற்கு கிழக்கு வாசல்களிலிருந்த தடைகள் எல்லாம் நீக்கப்பட்டிருந்தன. தொண்டர்கள் எவரும் வாசலில் காணப்படவில்லை. வழக்கம் போல் கோயில் பூசைகள் நடைபெற்றன. பக்தர்கள் கோயிலுக்குள் சென்று வணங்கிச் சென்றனர்.

ரதத்துக்கு முன்னும் வேதாகம பாராயணம் செய்தபடி சென்றனர். தேர்களின் பின்னால் பக்தர்கள் அங்கப் பிரதிஷ்டை செய்துகொண்டிருந்தனர். இம்முறை காவடி வழக்கத்திலும்பார்க்கக் குறைவாகவே காணப்பட்டது.

### விமானம் கோயிலைச் சுற்றியது

இலங்கை வானொலி நிலையத்தினர், நிகழ்ச்சியினை ஒலிப்பதிவுசெய்தனர். காலையில் ஒரு விமானம் கோயிலைச் சுற்றி மூன்று தடவை வட்டமிட்டபின் சென்றது.

யாழ்ப்பாணத்திலிருந்தும் மற்றும் இடங்களிலிருந்தும் விசேஷ பஸ்சேவை போடப்பட்டிருந்தது.

### எங்கும் சுந்தரலிங்கம் பேச்சு

கோயில் வீதியெங்கும் சுந்தரலிங்கத்தின் பேச்சாகவே இருந்தது. சுந்தரலிங்கத்தைப் பார்ப்பதற்கு பெண்கள், வயோதிபர் உட்பட ஏராளமான பக்தர்கள் குழுக்கள் வீட்டு வாசலில் காத்திருந்தனர்.

காலை 11 மணிவரை சுந்தரலிங்கம் வீதிகளில் காணப்படவில்லை. ரதம் நிலையத்திற்கு வந்ததும், சுந்தரலிங்கம் வெளிவீதியில் நின்று சுவாமி தரிசனம் செய்துவிட்டு, வீடுபோய்ச் சென்றுகொண்டிருந்தார். ஏராளமான பக்தர்கள் அவரின் பின்னால் சென்றுகொண்டிருந்தனர். வீதிகளில் சுந்தரலிங்கம், கை கூப்பி வணங்கியபடி சென்றார். பெண்கள், குழந்தை

[6- பக்கம் பார்க்க]

## வானத்திலிருந்து பூமாரி பொழிந்தது

அளவெட்டி, புதன்

தேரிலிருந்து சுவாமியை இறக்கியபோது வானத்திலிருந்து சில நிமிடநேரம் பூமாரி பொழிந்தது. மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலில் இன்று இந்தச் சம்பவம் நடைபெற்றது.

சுவாமியைத் தேரிலிருந்து இறக்கியபோது விமானமொன்று தாழப்பறந்து கோயிலைச் சுற்றிச்சுற்றிவந்து இந்தப் பூமாரியை பொழிந்தது. கொல்லங்கலட்டியை சேர்ந்த ஆர். பாலசந்திரன் என்பவர் தனது நேர்த்திக்கடனை கழிப்பதற்காகவே விமானத்திலிருந்து பூமாரியைப் பொழிந்தார். ஏயர் அசோசியேட் கம்பனியைச் சேர்ந்த இந்த விமானம் மாவைக் கந்தனுக்கு பூமாரியைப் பொழிவதற்காகவே விசேஷமாக ஏற்பாடு செய்யப்பட்டதாம்.

### இவர்கள்மீது நடவடிக்கை

யாழ்ப்பாணம், வியாழன்

ஆலயப்பிரவேசத்தை சாக்காக வைத்து சாதிக் கலவரங்களைத் தூண்ட முயற்சிப்பவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது.

இத்தகைய கலவரங்களைத் தூண்டுபவர்களை உடன் கைதுசெய்யுமாறு பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. அலறிக் அபயகுணவர்த்தனாவின் உத்தரவைத் தொடர்ந்து வடபகுதி பொலிஸ் அதிபர் இங்குள்ள சகல பொலிஸ் நிலையங்களுக்கும் இதுசம்பந்தமான கட்டளையைப் பிறப்பித்துள்ளார். [கா. தி.]

## தமிழர் உரிமைபெற உபசபாநாயகர்கூறும்யோசனை

யாழ்ப்பாணம், வியா.

"மாவட்டசபை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் தமிழர்களின் உரிமைகளை, ஒவ்வொன்றாக சமஷ்டிக் கட்சியினர் இழந்தனர். கடைசியில் தாங்கள் அரசாங்கத்திலிருந்து வெளியேறும் உரிமையையும் இழந்துவிட்டனர்.

உசனில்நேற்று முன்தினம் தமிழ்காங்கிரஸ் வாலிபமுன்னணியால், தமக்களிக்கப்பட்ட வரவேற்பில் உடுப்பிட்டி எம். பி. யும், உபசபாநாயகருமான திரு. எம். சிவசிதம்பரம் மேற்கண்டவாறு கூறினார்.

பாரிஸ்டர் எம். சிவானந்தன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. சிவசிதம்பரம் மேலும்கூறியதாவது:- மாவட்டசபைகள் மசோதா வரப்போகிறது என்றதும் பதவிகளுக்குள்ளே சமஷ்டிக் கட்சியினருக்கும் தெரிந்துகூட ஒவ்வொரு உரிமையாக இழந்தனர். ஐந்தேகால் லட்சம் இந்தியரை நாடு கடத்த சம்மதித்தனர்; திருக்கோணமலைத் துறைமுகத்தை இழந்தனர். அடையாள அட்டை மசோதாவை ஆதரித்தனர். அரசாங்கஊழியரை கைவிட்டனர். கடைசியில் கிடைத்தது ஒன்றுமில்லை. கட்சி வேறுபாடின்றி ஒற்றுமைப்பட்டாலேயொழிய தமிழன் உரிமைகளைப் பெறமுடியாது.

பாரிஸ்டர் சிவானந்தன் கூறியதாவது: மொழியுரிமைக்காகவும், வேலைவாய்ப்புக்காகவும் மாவட்டசபை பெறுவதாக சமஷ்டியினர் கூறினர். ஆனால் பிரதமர் 9 மாகாணங்களிலும் மாவட்டசபைகளில் தனிச்சிங்கள அதிகாரம் பதிவுகள், கடிதத்தொடர்புகள் இருக்கும் எனக் கூறிவிட்டார். இதனுள் மொழியுரிமை எப்படிக் கிடைக்கும். சமஷ்டிக் கட்சி எம். பி.க்கள் உடனடியாக ராஜிநாமாச் செய்வது தான் ஒரேவழி.

திரு. வி. ஆனந்தசங்கரி, திரு. எம். தில்லைநடராஜா ஆகியோரும் பலர் பேசினர்.

## 27-ம் திகதி குற்றப்பத்திரிகை தாக்கல்

வவுனியா, வியா.

மாங்குளம் முக்கொலை வழக்கு சம்பந்தமாக கைது செய்யப்பட்ட இருவர் மீதும் இம்மாதம் 27-ம் திகதி குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும்.

அரசாங்க எழுதுவினைஞர் சங்கம்

## செப்டம்பரில் வேலை நிறுத்த தீர்மானம்

கொழும்பு, புதன்

அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் வரும் செப்டம்பர் மாதத்தில் வேலைநிறுத்தமொன்றை மேற்கொள்வதென இன்று தீர்மானித்துள்ளது. வேறு பல தொழிற்சங்கங்களைச் சேர்ந்த 125 பிரதிநிதிகள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

செப்டம்பரில் செய்வதென தீர்மானிக்கப்பட்ட வேலைநிறுத்தம்பற்றி இறுதிமுடிவெடுப்பதற்கு கமிட்டி ஒன்று தெரிவுசெய்யப்பட்டது.

சம்பள உயர்வு உட்பட மற்றும் சில கோரிக்கைகளை அரசாங்கத்துக்கு எழுதுவினைஞர் சங்கம்சமர்ப்பித்திருந்தது. இதனைமுன்வைத்தே அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் வேலைநிறுத்தம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கிறது.

இம்மாதம் 31ம் திகதி தமது நிலையை விபரிப்பதற்காக அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் பொதுக்கூட்டமொன்றை நடத்தவுள்ளது.

கம்யூனிஸ்ட் சார்பான தொழிற்சங்கம் இந்தவேலைநிறுத்தத்திற்கு ஆதரவு அளிப்பதில்லையென முடிவு செய்துள்ளதாகவும் தெரிகிறது.

### பௌத்த காங்கிரஸ் பிரதமருக்கு நன்றி

காலி, புதன்

"மாவட்ட சபையைக் கைவிட்டமைக்காக சகல சிங்கள மக்களும் பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயகாவுக்கு நன்றியுடையவர்களாவர். சிங்கள மக்கள் காட்டிய பலத்த எதிர்ப்பினாலேயே பிரதமர் மாவட்டசபையைக் கைவிட்டார். சிங்கள மக்கள் நாட்டுக்கும், சமுதாயத்துக்கும், கலாச்சாரத்துக்கும் அபாயம் விளைவிக்கக்கூடிய எவற்றையும் தைரியத்துடன் எதிர்க்கும் சக்திவாய்ந்தவர்கள்".

இவ்வாறு காலியில் மாகோல் என்னுமிடத்தில் திறப்புவிழாவொன்றில் கலந்துகொண்டு பேசுகையில் அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் தலைவர் எச். டபிள்யூ அமரசூரியா கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாசகம்

கெட்ட நினைவு ஒரு திருடன்போல் நமது உள்ளத்திலிருந்து நம்மைக் கெடுத்துவிடும். நன்னெறியே நம்மை தூய்மைப் படுத்தி நம்மைக் காப்பாற்றும். நல்ல நினைவுகளை வளர்த்துக்கொள்ளுங்கள். இறைவன் தூய்மையான செய்கைகளையே எதிர் பார்க்கின்றன்.

—சுவாமி சிவானந்தர்.

ஈழநாடு

Ceylon National Tamil Daily
EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone 389.

சுபகிருது வருடம்? [illegible] ஆடி மாதம் 10-ந்திகதி (25-7-68)

## ஓர் அற்புதம்

மாவிட்டபுரத்தில் மீண்டும் அமைதி ஏற்பட்டு, கோவில் திருவிழாக்கள் தொடர்ந்து நடக்க முடிந்ததை ஓர் அற்புதமென்றே கூறவேண்டும். நேற்று முன்தினம் காலை அங்கு நடைபெற்ற அமளி துமளியையும், அடியடி கண்ணீர்ப்புகைப்பிரயோகத்தையும், பரபரப்பையும் பார்த்தவர்கள், கோவில் உற்சவங்கள் தொடர்ந்து நடக்க முடியுமென்றோ, கோவில் மீண்டும் திறக்கப்பட்டு பூசைகள் வழமைபோல் நடக்குமென்றோ நினைத்திருக்கவும் முடியாது. அவ்வளவு மோசமான நிலையிலும் சம்பந்தப்பட்ட பலருடனும் பல மணி பொறுமையுடன் பேசி, நெருக்கடியைத் தணித்து அமைதியை வெற்றிகரமாக நிலைநாட்டி, உற்சவத்தைத் தொடர்ந்து நடத்தவும். கோவில் பூசைகள் வழமைபோல் நடக்கவும் உதவிய யாழ்ப்பாண அரசாங்க அதிபர் வேர்னன் அபயசேகராவுக்கு பொதுமக்களின் நன்றியும் பாராட்டும் உரியதாகும்.

இருதரப்பிலும் உணர்ச்சிகள் அதிகரித்து, நிலைமை கொந்தளிக்கையில் ஆத்திரப்பட்டு ஒரு தவறான நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பின், எவ்வளவோ உயிர்ச்சேதங்களும் கஷ்ட நஷ்டங்களும் ஏற்பட்டிருக்கும். அவ்விதமெதுவும் மேற்படாமல் இருதரப்பினரையும் சமாதானப் படுத்தி, அமைதியை நிலைநாட்டியது பெரிய காரியம். மாவிட்டபுரம் கோவில் நெருக்கடி, இங்கு தமிழரிடையே பெரிய சாதிச் சண்டையைக் கிளப்பி, சர்வ நாசத்தை ஏற்படுத்துமென்ற ஆவலுடன் காத்திருந்தவர்கள் பலரென பகுபகிரங்கரகசியம். பல கொழும்புப் பத்திரிகைகளின் யுத்த நிருபர்கள் படைபடையாக வந்து, செய்திகளைச் சுடச்சுட அனுப்பக் காத்திருந்தார்கள். இங்கு சிலமணி நேரங்களில் அமைதி நிலைநாட்டப்பட்டுவிட்டதைப்பற்றி அவர்களுக்கெல்லாம் பெரும் ஏமாற்றமாக இருந்திருக்கும். பாவம்!

ஆனால் அமைதி ஏற்பட்டாலும், பிரச்னை தீரவில்லை. திருவிழா முடிந்தபின், சம்பந்தப்பட்ட சகலரும் கூடி நிதானமாக யோசித்து, பேச்சுவார்த்தைகள் மூலம் இதைத் தீர்க்கவாமென்று முடிவு செய்துள்ளனர். சட்டத்தில் குறையுள்ளதாயும் அதைச்சீர்செய்யவேண்டுமென்றும் சிலர் கூறுகின்றனர். பலாத்காரபுரட்சி மூலமே இதைத் தீர்க்க முடியுமென்பது சிலர் கட்சி. யாழ்ப்பாண பொதுமக்களின் மனம் இப் பிரச்னையில் எவ்விதமுள்ளதென்பதற்கு, சட்டமோ, பலாத்காரபுரட்சியோ இன்றி நல்லூர், வண்ணார்பண்ணை பெருமாள் கோவில் உள்ளிட்டு பல முக்கிய கோவில்கள் அமைதியாக திறக்கப்பட்டு விட்டதே நல்ல அத்தாட்சி. பலகாலமாக இருக்கும் ஒரு சமூக வழக்கத்தை மாற்றுவதென்பது சுலபமல்ல. சட்ட நிர்ப்பந்தத்தாலோ வெளியார்களின் தலையீடுகளாலோ இதை சுமூகமாகத் தீர்க்க முடியாது. அன்பு வழியே இதற்குச் சிறந்தது. திரு. வி. சுந்தரலிங்கத்தாரும், ஹரிஜனங்களுக்கு ஆலயப்பிரவேச உரிமையை அளிக்க வேண்டுமென்பதையே தாம் ஆதரிப்பதாகக் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது. இக்கோவில் திருவிழா முடிந்ததும், சைவசமூகத்தைச் சேர்ந்த பல தலைவர்களும் கூடி, அச்சமூகத்திலே ஒரு பகுதியினரான ஹரிஜனர்களும், மாவிட்டபுரம் உள்ளிட்டு எல்லா கோவில்களிலும் தடையில்லாமல் பக்தியுடன் சென்று வழிபட, தக்க ஏற்பாடுகள் அன்புடன் செய்யவேண்டியது அவர்களது கடமையும் பொறுப்புமாகும்.

ஆசிரியர்

## சம்பள வெட்டு

மருத்தித்துறை, புதன் தலைமையாசிரியர் பதவிகளில் கடமையாற்றிய தமிழாசிரியர் பலர் கடந்த சில ஆண்டுகளாக மகா வித்தியாலயங்களுக்கு மாற்றப்பட்டு, அங்கு உதவியாசிரியராகக் கடமையாற்றிய போதிலும், தொடர்ந்து தலைமை ஆசிரியர் பதவிச் சம்பளம் பெற்றுவந்துள்ளதாகவும், அவர்களுக்கு வழங்கப்பட்ட மேலதிகச் சம்பளம் மாதவீதம் கழிக்கப்படுமென்றும் இப்பகுதியிலுள்ள சில ஆசிரியருக்கு வடபிரதேச கல்விஅதிபதி அறிவித்தல் கொடுத்துள்ளதாகத் தெரிகிறது.

[4ம் பக்கத் தொடர்ச்சி]

தான் சிலப்பதிகாரம். அநீதியைக் கண்டு எவரும் கொந்தளிக்க வேண்டுமென்பதை பெண்குலத்தில் தாய் கண்ணகி எடுத்துக்காட்டியுள்ளார். இசைக்கு முக்கிய இடம் கொடுத்தவர்கள் தமிழர்கள். விமர்சனம்செய்வதோடு தமிழினம் நின்றுவிடக்கூடாது.

சிலப்பதிகாரம் இளங்கோ அடிகளால் தமிழில் எழுதப்பட்டது. இந்த மொழிக்கு இடம் கொடுத்தவர்தான், சிலப்பதிகாரத்துக்கு புத்துயிர் கொடுத்தவர்களாவோம் என்று கூறினர்.

ஏழாலை கிராமசபைத்தலைவர் திரு. கே. சிவகுரு பேசும் போது, பேச்சு வன்மை படைத்தவர் எழுத்திலேயும் சிறந்தவர்களாக இருக்கிறார்கள் என்பதை செந்நெறி ஆசிரியர் திரு நாவேந்தன் நிரூபித்துவிட்டார், காலத்தை வீணாக்கும் நலிவு இலக்கியங்களை படிக்காது நல்லிலக்கியங்களைப் படிக்க எல்லோரும் முன்வரவேண்டும். நூலாசிரியர் இதற்குமுன் இரண்டு நூல்களை வெளியிட்டுள்ளார். இவரின் திறமை போற்றக்கூடியதென்று கூறினர்.

வழக்கறிஞர் திரு. ரி.குணரத்தினம், திரு. கே. செல்லத்துரை, திரு. எஸ். சரவணபவன் ஆகியோர் உரையாற்றினர். (த.நி.)

# அதிகாரத்தை எப்படி பயன்படுத்துவது?

## சிலப்பதிகாரம் விளக்குகிறது என்கிறார் உபசபாநாயகர்

யாழ்ப்பாணம், வியா. 'தமிழ்க்காவியங்கள் ஒரு காலத்திற்கு மட்டுமல்ல எந்தக் காலத்திலும் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக அமைந்துள்ளன. அரசியலில் ஈடுபட்டுள்ள தலைவர்களை அறநெறியில் திருப்பும் பொறுப்பாகவுள்ள பொதுமக்களுக்கு நல்ல பாடம் கற்பிப்பது சிலப்பதிகாரம்.'

இவ்வாறு 'சிலப்பதிகாரச் செந்நெறி' என்னும் நூலை வெளியீடுசெய்து பேசும்போது உபசபாநாயகரும் உடுப்பிட்டி எம். பி.யுமான திரு. எம். சிவசிதம்பரம் கூறினர்.

யாழ். மலாயா கபே மேல் மாடி மண்டபத்தில் நடைபெற்ற இந்நூல்வெளியீட்டு விழாவுக்கு இந்து சாதன ஆசிரியர் திரு. ஆர். எஸ். சிலப்பிரகாசம் தலைமைவகித்தார்.

உபசபாநாயகர் திரு. சிவசிதம்பரம் தொடர்ந்து பேசுகையில், அதிகாரம் பெறுவது இலேசான காரியம். ஆனல் பெற்ற அதிகாரத்தை நேர்மையான முறையில் நடத்தப் பழகிக்கொள்வதை வலியுறுத்துவ

(2-ம் கலம் பார்க்க)

### ஆசிரியருக்குக் கடிதம்

## மக்கள் வாழவீடுதான் தேவை

16-7-68-ம் திகதிய 'ஈழநாடு' இதழில் குருநகர் வீடமைப்புத்திட்டம் சம்பந்தமாக யாழ்ப்பாண அரசாங்க செயலகத்தில் நடந்த மகாநாட்டின் போது திரு. ஏ. இராஜசூரியர் தெரிவித்த கருத்துக்கள் குருநகர் மக்களின் ஏகோபித்தகண்டனத்துக்கு இலக்காகியுள்ளது. 'குருநகருக்கு வீடமைப்புத்திட்டம் தேவையில்லை. விளையாட்டு மைதானமே வேண்டும்' என்பது அவர் கருத்தாகும்.

விடுதலைப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு அரசாங்கமும் யாழ்ப்பாணத் தொகுதிஎம். பி. யும் எடுத்துவந்த அயராத முயற்சியினுல் உருவாக்கப்படவிருக்கும் வீடமைப்புத்திட்டத்திற்கு இடையூறு விளைவிக்கும் முயற்சியாகவே திரு. இராஜசூரியரின்பேச்சு அமைந்துள்ளது.

பாட்டாளி மக்கள் வாழுகின்ற குருநகருக்கு திரு. இராஜசூரியர் கனவு காண்பதுபோல் 'கால் பேஸ்' திடல் வேண்டியதில்லை. மக்கள் வாழ வீடுகள்தான் தேவை. குருநகர் மக்களுடன் எவ்வித தொடர்புமற்ற திரு. இராஜசூரியர் எமது ஜீவாதாரப் பிரச்னையில் தலையிட்டதை மக்கள் சார்பில்நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

அன்னர் குறிக்கும் இடத்தின் ஒருபகுதியைக் கல்வி இலாகா சுவீகரித்துக் கட்டிடங்கள்கட்ட இருந்தது. குருநகர் கலைக்கழகத்தின்முயற்சியினுலும், எனது முயற்சியினுலும் யாழ்ப்பாண எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தின் நடவடிக்கைகளினுலும் அப்பகுதி விளையாட்டு மைதானத்துக்கென ஒதுக்கப்பட்டிருப்பதும் ஏனையபகுதி வீடமைப்புக்கு ஒதுக்கப்பட்டுள்ளதும் பலர் அறிந்த விஷயம். இதனை அறியாதோர் இதில் தலையிடுதல் முறையல்ல.

ஜே. ஏ. செல்வநாயகம் ஜே. பி.

குருநகர்.

## இன்றைய பலன்

(25 - 7 - 68)

ஆடி மீ 10 உ

வியாழக்கிழமை

திதி- அமாவாசை மாலை 6-01மேல்பிரதமை.

நட்சத்திரம் — புனர்பூசம் பகல் 7-22 மேல் பூசம்.

ராகுகாலம் - 1-31 3-01.

சுபநேரம்- 7-31— 9-01.

இன்று பிறந்தவர்களுக்கு— அவசரமுடிவு ஆபத்தைத் தரக்கூடும். நாவடக்கம் நன்று. குடும்பத்தில் சிறு பிணக்குகள் தோன்றிமறையும். நண்பர் ஒருவரின் மோசடி அம்பலமாகும். ஆசிரியர்களுக்கு அதிருப்தியே நிலவும். வணிகர்கள் பாதிக்கப்படலாம். மாணவர்களுக்கு மனக்கிளர்ச்சிகள் ஏற்படலாம். உணர்ச்சிவசப்படாமல் இருத்தல் நன்று. சிலர் வாழ்க்கையில் நீண்ட பயணத்துக்கும் இடமுண்டு. இதன் மூலம் இடப்பிரிவும் ஏற்படலாம்.

மேஷம்- அதிகார அனுகூலம், அகமகிழ்ச்சி.

ரிஷபம்- பாக்கிய விருத்தி, பகைவர் பணிவர்.

மிதுனம்- தானிய நஷ்டம், தனிவழி நாட்டம்.

கடகம்- பந்துக்கள் கலகம், பகை மூட்டம்.

சிம்மம்- மனைவாழ்வில் மகிழ்ச்சி, மனதில் ஆனந்தம்.

கன்னி- சூழ்ச்சி மிகுதி, சோதனைக் கஷ்டம்.

துலாம்- அன்னைமொழி அமிர்தம், அமைதியுடன் இரு.

விருச்சிகம்- அன்பின் பிணைப்பு, ஆனந்த வெள்ளம்.

தனுசு- நம்பிக்கை நாசம், நலிந்த வாழ்வு.

மகரம்- துளிவிடும் காதல், ஒளிவிடும் வாழ்வு.

கும்பம்- அபாய அறிவிப்பு. அவதானம் வேண்டும்

மீனம்- போன பணம் வரும், புதுமணம் தரும்.

சோதிடக்கலாநிதி
திருமதி வேலுப்பிள்ளை

## சைவ மகாநாடு

யாழ்ப்பாணம், வியா. கைதடி இந்து வாலிபர் சங்கத்தின் 5-வது சைவ மகாநாடு ஆவணி மாதநடுப்பகுதியில் கைதடியில் 'சிவநெறித் தொண்டர்' அரங்கில் மூன்று நாட்கள் நடைபெறவிருக்கின்றது. இதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன.

# ஐயாறன் எழுதுவது

முந்தநாள் இரவு ஓர் அன்பர் வந்து மாவிட்டபுரத்துக்கு வருமாறு கார் வைத்துக்கொண்டு அழைத்தார். முதலில் சற்றே தயங்கினேன். காரணம் பயமல்ல. ஆலயத்திலே சுவாமி தரிசனம் செய்வதின் நோக்கம் இறைவனுடன் மனம் லயப்படுவதற்குத்தான். ஆனல் கோவிலிலேயே குழப்பம் நடப்பதாயின் அங்கு மனம் எப்படி லயப்படும்? எப்படி அமைதியடையும்?

ஆனலும் அன்பர் வற்புறுத்தவே அங்குள்ள முருகனே அழைப்பதாக நினைத்துச் சென்றேன். இரவு சுமார் 9 மணி இருக்கும். தேர் - லை அலங்கரித்து சிலர் தீவட்டி வெளிச்சத்தில் பெரிய சக்கரம் - லைப் பூட்டிக் கொண்டிருந்தார்கள். கோயிலுக்குள்ளிருந்த சுவாமி வெளியே மயில் வாகனத்திலேறி புறப்பட்டு வந்தார். கோவில் முன்பாக ஒருவர், கந்தபுராண சம்பந்த உபந்நியாசம் செய்து கொண்டிருந்தார். அநேகமான தாய்மார்கள் அமர்ந்து கேட்டுக் கொண்டிருந்தனர். பக்தர்கள் கூட்டம் கூட்டமாக நின்று தரிசித்தார்கள்.

திருவிழாவுக்காக ஏராளமான கடைகள் மறுபுறம் திறக்கப்பட்டுள்ளன. வியாபாரம் நடந்து கொண்டிருந்தது. இதையெல்லாம் பார்க்கையில் அங்கு அன்று காலை எவ்வித கலவரங்களும் நடந்ததாகவே சொல்ல முடியாது. எல்லாம் அமைதியாக வழக்கம் போல் நடந்து வந்தன.

0 0 0

பக்கத்தில் ஒரு சின்னக் குடிசை. ஒருவர் தன் பிள்ளையை மடியில் வைத்துக் கொண்டு திண்ணையில் இருந்தார். "இங்கே உட்காரலாமா? என்று கேட்டேன். "அப்படி உட்காருங்கள்'' என்றார் அன்புடன். "பகலில் இங்கு என்னென்ன நடந்தது?'' என்று மெதுவாகப் பேச்சுவிட்டேன். உள்ளிருந்த தாயின் குரல் "நாங்களெல்லாம் அசலூரு. எங்களுக்கு ஒன்றுமே தெரியாது'' என்று பதில்கொடுத்தது. பாவம்! இந்த எளிய குடும்பத்தார், காரைக்குடியிலிருந்து வந்து, கோவில் சிறப்ப வேலை செய்கிறார்களாம்.

ஆண்மகன் அவ்வளவு பயப்படவில்லை. "மனுசர்களுக்குத் தான் கஷ்டம் வருவதுண்டு. இப்போது சுவாமிக்கும் வருகிறது. காலையிலே இருந்த இருப்பைப் பார்த்தால், எல்லாம் சுடுகாடாகிவிடுமென்றே நினைத்தேன். கதவை மூடிக் கொண்டு உள்ளேயே இருந்தோம். நல்லவேளை எல்லாம் அடங்கி, தொடர்ந்து உற்சவமும் நடக்கிறது. எல்லாம் அந்த முருகன் கருணைதான்'' என்றார்.

வள்ளி, தெய்வானை சமேதமாக மயில்மீதுவந்த முருகப்பெருமானைக் கண்டு வணங்கி "சுவாமி! இந்தப் புதுத் திருவிளையாடலின் நோக்கமென்ன? ஒன்றும் புரியவில்லையே?'' என்று கேட்டேன். அவர் சிரித்துவிட்டு "பயப்பட வேண்டாம், எல்லாம் நன்மைக்குத்தான்'' என்று சொல்லாமற்சொன்னர். மாவிட்டபுரம் கந்தனுக்கு அரோகரா சொல்லி வீட்டுக்குத் திரும்பினேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்கு ஆசியாவில் மீண்டும் போர் முரசு

## அடுத்த போர் உலகையே பாதிக்கும் என்று நாஸர் எச்சரிக்கிறர்!

கெயிரோ, ஜூலை 24

**இஸ்ரேலுடனான புதிய போருக்கு ஆயத்தமாகும்படி ஐக்கிய அரபுக் குடியரசு ஜனாதிபதி நாஸர், தமது மக்களிடம் விண்ணப்பித்துள்ளார்.**

**ஐ. அ. கு.வின் புரட்சி ஆண்டுதினத்தையொட்டி, புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட தேசிய சபையில் பேசுகையிலேயே, நாஸர் இவ்வாறு குறிப்பிட்டார்.**

மேற்கு ஆசியாவில் சமாதானத்துக்கான அறிகுறி கள் எதுவும் தோற்றவில்லை என்று அவர் மேலும் தமது உரையில் கூறினர். ஆக்கிரமித்த அரபுப்பகுதி யிலிருந்து இஸ்ரேல் வெளியேறினலன்றி, மேற்கு ஆசியாவில் சமாதானம் ஏற்பட முடியாது என்று நாஸர் வலியுறுத்தினர்.

"பலாத்காரத்தினல் எடுக்கப்பட்டது, பலாத்காரத்தினலேயே மீட்கப்பட முடியும்" என்றார் நாஸர்.

**எச்சரிக்கை**

மேற்கு ஆசியாவில் இன்னுமொரு முறை போர் வெடித்தால், அது மேற்கு ஆசியாவை மட்டுமின்றி உலகம் முழுவதையும் பாதிக்குமென்று ஐ. அ. கு. ஜனாதிபதி எச்சரித்தார்.

இஸ்ரேலுடன் சேர்ந்து அரபு நாடுகளுக்கெதிராகச் சதி செய்வதாக அவர் அமெரிக்காவைக் கண்டித்தார். அதே நேரத்தில், கடந்த போருக்குப் பின்னர் ஐ. அ. குவை மீண்டும் ஆயுத பாணியாக்கப் பல உதவிகள் செய்தமைக்காக அவர் ரஷ்யாவுக்கு நன்றி தெரிவித்தார். இந்த உதவிகளுக்கு ரஷ்யா எவ்வித நிபந்தனையையும் குறிப்பிடவில்லை என்பதையும் அவர் சுட்டிக்காட்டினர்.

# இஸ்ரேலுடன் புதிய போருக்கு ஈராக் ஜனாதிபதி அறைகூவல்

பக்தாத், ஜூலை 24

ஈராக்கின் புதிய ஜனாதிபதி மேஜர் ஜெனரல் அல் பக்ர், தனது நாட்டு மக்களையும் இஸ்ரேலுடனான ஒரு புதிய போருக்குத் தயாராகும்படி கேட்டுக்கொண்டுள்ளார்.

இஸ்ரேல் கைப்பற்றியுள்ள அரபுப் பிரதேசங்களை மீட்பதில் அரபு நாடுகள் ஒற்றுமையான எதிர்ப்பை இஸ்ரேலுக்கு அளிக்கப்பட வேண்டுமென அல் பக்ர் குறிப்பிட்டார்.

புரட்சி மூலம் தம்மைப் பதவியிலமர்த்திய படைப் பிரிவுகளின் அணிவகுப்பைப் பார்வையிட்டுவிட்டு, அவர்களிடையே பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினர்.

இஸ்ரேல் அணு ஆயுதங்களைப் பெறுவதை அரபு நாடுகள் எப்படியாயினும் தடை செய்ய வேண்டுமென்பதையும் அவர் தமது உரையில் வலியுறுத்தினர்.

ஈராக்கின் தேசிய சபை விஸ்தரிக்கப்படும் என்று ஈராக் அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இத்தேசிய சபையில், அரசியல்வாதிகள் எத்தனை பேர் இருப்பார்களென்ற விவரம் வெளியிடப்படவில்லை.

# இஸ்ரேலிய விமானம் அல்ஜீரியாவுக்குக் கடத்தப்பட்டது

அல்ஜியர்ஸ், ஜூலை 24

இஸ்ரேலிய விமானம் ஒன்று, ஆயுதந்தாங்கிய அரபியர்கள் சிலரினல், அல்ஜீரியாவுக்குக் கடத்திச்செல்லப்பட்டது.

இவ்விமானத்திலிருந்த பத்து சிப்பந்திகளையும், 12 இஸ்ரேலியப் பிரயாணிகளையும் தவிர, மற்றைய இஸ்ரேலியரல்லாத 20 பிரயாணிகளை அல்ஜீரியா வேறொரு விமானத்தில் பாரிசுக்கு அனுப்பி வைத்துள்ளது. இஸ்ரேலியர்களையும் விமானங்களையும் அல்ஜீரியா தடுத்து நிறுத்திவைத்துள்ளது.

# ஐ. அ. கு. வே பொறுப்பு என்கிறர் இஸ்ரேல் பிரதமர்

டெல் அவிவ், ஜூலை 24

டெல் அவிவில், இவ்விமானக்கடத்தல் சம்பந்தமாக இஸ்ரேலியப் பிரதமர் திரு. எஷ்கொல் குறிப்பிடுகையில், கடத்தப்பட்ட விமானத்தையும் 22 இஸ்ரேலியரையும் அல்ஜீரியாவிடமிருந்து திருப்பிப் பெறுவதற்கு இஸ்ரேல் சகல முயற்சிகளையும் எடுத்து வருவதாகக் கூறினர்.

இஸ்ரேலிய விமானத்தை அல்ஜீரியாவுக்குக் கடத்திச் சென்ற அரபுக் குழுவினர், ஐ. அ. கு. வில் வேரூன்றியுள்ள ஒரு ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்களென்றும், ஆகவே, இச்சம்பவத்துக்கு ஐ. அ. கு.வே முழுப் பொறுப்பையும் ஏற்கவேண்டுமென்றும் திரு. எஷ்கொல் மேலும் கூறியுள்ளார்.

## அயூப்புக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

லண்டன், ஜூலை 24

பாகிஸ்தான் அதிபர் அயூப்கான் தங்கியிருந்த இடத்துக்கு வெளியே நின்று 150க்கு மேற்பட்ட லண்டனில் பயிலும் பாகிஸ்தானிய மாணவர்கள் நேற்று ஆர்ப்பாட்டம் செய்தனர். அயூப் லண்டன் வந்துசேர்ந்த சிலமணி நேரத்திற்குப் பின் இந்த ஆர்ப்பாட்ட சம்பவம் நடைபெற்றது.

பாகிஸ்தான் அரசாங்கத்தின் போக்கை எதிர்த்து இவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

அயூப்பின் விஜயத்திற்கு லண்டனில் பலத்த பொலிஸ் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## மலேஷிய - பிலிப். தகராறில் சமரசம்

### இந்தோனேஷியா முயற்சி

ஜக்கார்த்தா, ஜூலை 29

மலேஷியாவுக்கும் பிலிப்பைன்ஸுக்குமிடையே வட போர்னியோப் பிராந்தியமான சபா விவகாரத்தில் ஏற்பட்டுள்ள தகராறில், இந்தோனேஷியா சமரச முயற்சி எடுக்க முற்படலாமென்று இந்தோனேஷிய வெளியுறவுமந்திரி டாக்டர் ஆதாம் மாலிக் நேற்று ஜக்கார்த்தாவில் அறிவித்தார்.

இந்தச் சமரச முயற்சி எந்த வகையில் அமையும் என்பது பற்றிய விவரங்கள் எதையும் அவர் குறிப்பிடவில்லை.

## பல்கேரிய தூதரக அதிகாரிகள் அல்பேனியாவிலிருந்து வெளியேற்றம்

டிரானு, ஜூலை 24

அல்பேனியாவிலுள்ள பல்கேரியத் தூதரகத்தினரை அல்பேனியா நாடு கடத்தியுள்ளது.

அண்மையில் பல்கேரியா, அங்குள்ள அல்பேனியத் தூதரக அதிகாரிகளை நாட்டை விட்டு வெளியேற்றியதற்குப் பழிவாங்கும் நடவடிக்கையாகவே அல்பேனியா இப்போது இந்த முடிவை எடுத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இரு நாடுகளும், தத்தம் நாடுகளிலுள்ள தூதரக அதிகாரிகள், சதி வேலைகளில் ஈடுபட்டதாகப் பரஸ்பரம் குற்றஞ்சாட்டியுள்ளன.

# மே. வங்காளப்படகு விபத்தில் 28 பேர் மரணம்

கல்கத்தா, ஜூலை 24

மேற்கு வங்காளத்தில், ஓர் ஆற்றில் ஏற்பட்ட படகு விபத்தில், 28 பேர் உயிரிழந்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இப்படகில் 65 பிரயாணிகள் சென்றுகொண்டிருந்ததாகவும், படகு ஒரு பாறை மீது மோதியதன் விளைவாக நீரில் கவிழ்ந்துவிட்டதாகவும் கூறப்பட்டது. 36 பிரயாணிகள் காப்பாற்றப்பட்டனர். ஒருவருடைய சடலம் மட்டும் மீட்கப்பட்டுள்ளது.

# அமெரிக்க உயர் தளபதி மேஜர் ஜெனரல் வோர்லி

## வியட்கொங் தாக்குதலில் உயிரிழந்தார்

சைகோன், ஜூலை 24

தென்வியட்நாமில், ஆறுவது அமெரிக்க விமானப் படையின் தளபதியான மேஜர் ஜெனரல் ரொபேட் வோர்லி, வியட்கொங்கினரால் தாக்கப்பட்டபோது மரணமடைந்தார்.

தென்வியட்நாமின் வட பகுதிகளில், அமெரிக்க இராணுவத் தளமான தானங்குக்கு வடகிழக்கே, விமானமொன்றில் சுற்றிப் பார்வையிட்டுச் செல்கையிலே, அவரது விமானம் வியட்கொங்கினரின் ரொக்கெட் தாக்குதலுக்குள்ளாகியது. விமானத்தை விட்டு ஜெனரல் வோர்லியால் வெளியேறமுடியவில்லை.

மேஜர் ஜெனரல் வோர்லி இரண்டாவது உலகப் போரில் திறமையாகக் கடமையாற்றி விசேஷ விருதுகள் பெற்றவராவார். வியட்நாம் போரில் இதுவரை உயிரிழந்த மூன்றுவது அமெரிக்க உயர்தர இராணுவ அதிகாரி இவராவர்.

## மூன்று இந்திய நகர்களில் பத்திரிகை ஊழியர் வேலைநிறுத்தம்

புதுடில்லி, ஜூலை 24

புதுடில்லி, பம்பாய், கல்கத்தா ஆகிய நகரங்களின் பத்திரிகை ஊழியர்கள் காலவரையற்ற ஒரு வேலைநிறுத்தத்தை ஆரம்பித்துள்ளதால், இன்று காலை, இந்த 3 நகரங்களிலும் பத்திரிகைகள் வெளியாவது பெரிதும் தடைப்பட்டது.

புதுடில்லியில், 6 ஆங்கில தினசரிகளில், ஆக இரண்டு மட்டுமே வெளியாகின.

அகில இந்திய பத்திரிகை ஊழியர் சங்கத்தைச் சேர்ந்தவர்களே, இந்த வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பத்திரிகை ஸ்தாபனங்களில் கடமையாற்றும் பத்திரிகையாளரல்லாத ஊழியர்களுக்கு, ஊதியசபை சிபார்சுசெய்துள்ள சம்பளங்களை அளிக்கவேண்டுமென முதலாளிகளைக் கோரியே இந்த வேலைநிறுத்தம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

சோவியத்-செக் எல்லையில்

# இராணுவ ஒத்திகைப் பயிற்சிகளில் சோவியத் துருப்புகள் ஈடுபட்டுள்ளன

## 'எல்லைகளைக்காக்கும் ஆற்றல் எமது படைகளுக்குண்டு' — செக். தளபதி

மாஸ்கோ, ஜூலை 24

சோவியத் யூனியன், தனது 4500 மைல் நீளமான மேற்கெல்லைய எல்லைகளில் இராணுவப் பயிற்சிகளை ஆரம்பித்துள்ளது. செக்கோஸ்லாவாக்கிய எல்லைக்கருகேயுள்ள பகுதிகளிலும் இந்த இராணுவ ஒத்திகைப் பயிற்சிகள் நடைபெறுகின்றன.

சோவியத் — செக்கோஸ்லாவாக்கிய, சோவியத்— போலந்து எல்லைகளில் இராணுவப் பயிற்சிகள் நடைபெற்று வருவதாகவும், அவை சோவியத்—மேற்கத்தைய எல்லை முழுவதும் விஸ்தரிக்கப்படுமென்றும் சோவியத் பாதுகாப்பு மந்திரி அறிவித்துள்ளார். அவரது அறிவிப்பு, சோவியத் பத்திரிகையான 'இஸ்வெஸ்தியா'வின் முதற்பக்கத்தில் வெளியிடப்பட்டது. இந்த இராணுவப் பயிற்சிகளில் [illegible] கலந்துகொள்வர்.

செக்கோஸ்லாவாக்கிய இராணுவத் தளபதியும் பாதுகாப்பு மந்திரியும் வார்சோ இராணுவ உடன்படிக்கையில் மாற்றங்கள் கோரியதாகவும் சோவியத் யூனியன் மற்றும் நாடுகளிலிருந்து செக் சோஷலிஸத்தையும், எல்லைகளையும்பாதுகாக்க வேண்டுமென்றும் கூறியதாக ரஷ்ய செய்தித்தாபனம் குற்றஞ்சாட்டியுள்ளது.

செக்கோஸ்லாவாக்கியாவின் எல்லைகளைப் பாதுகாக்கச் செக். எல்லைப்படைகள் போதிய ஆற்றல் படைத்துள்ளதாகச் செக். எல்லைப்புறத் துருப்புகளின் தளபதி அறிவித்துள்ளதாகச் செக். செய்தித்தாபன மொன்று கூறியுள்ளது.

செக்கோஸ்லாவாக்கியாவுடனான தனது எல்லையில் கிழக்கு ஜெர்மனி, முன்னுக்கம்பியங்கள் அடைத்து வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

**யூதாண்ட் மறுப்பு**

ஐ. நா.விலுள்ள செக். பிரதிநிதி, செக். நிலைமையினல் சர்வதேச அமைதிக்குப் பங்கம் ஏற்படும் ஆபத்து இருப்பதாகத் தம்மிடம் ஒருபோதும் கூறவில்லை என்று ஐ. நா. பொதுக் காரியதரிசி யூ. தாண்ட் நியூயோர்க்கில் அறிவித்துள்ளார்.

செக். நிலைமை குறித்து யூ. தாண்ட் பேசியிருப்பது இதுவே முதற்தடவையாகும்.

**பேச்சுக்கள்**

இது இவ்வாறிருக்க செக்கோஸ்லவாக்கிய, ரஷ்யத் தலைவர்களுக்கிடையேயான பேச்சுவார்த்தைகள் பற்றிய செய்திகள் எதுவும் தெரியவில்லை.

ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. பிரெஷ்னெவ் தலைமையில் ரஷ்ய தூதுகோஷ்டியொன்று பிராக் புறப்பட்டுள்ளதாகக் கூறப்படும் செய்தியொன்றை மாஸ்கோ இன்னும் ஊர்ஜிதம் செய்யவில்லை. அதே சமயம் அது அச் செய்தியை மறுக்கவுமில்லை.

## வெள்ளி விழா

ஊர்காவற்றுறை வியாழன்

ஊர்காவற்றுறை புனித ஜேம்ஸ் சனசமூக நிலைய வெள்ளிவிழா இன்றுமாலை சந்தியோகுமையோர் ஆலய மைதானத்தில் நடைபெறவுள்ளது. தலைவர் எஸ். பி. ஜூலியன் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் முன்னாள் சங்கிலிஸ்தாக் திரு. பே. குருசுமுத்து தம்பதிகள் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.

## செபமாலை மாதா திருநாள்

ஊர்காவற்றுறை புதன்

தீவுப்பகுதியின் பெரிய யாத்திரை ஸ்தலமான சரவணை சின்னமடு செபமாலை மாதா கோவில் திருநாள் எதிர்வரும் சனிக்கிழமை ஆரம்பமாகிறது. தொடர்ந்து நான்காம் திகதி வரையும், செபமாலை எழுந்தேற்றம், மாலைப்பூசை ஆகியன நடைபெறும் 5-ம் திகதி காலை திருநாள் முடிவுறும்.

## குடிநீர் கிடைக்கும்

ஊர்காவற்றுறை புதன்

நாரந்தனையிலிருந்து குழாய்மூலம் ஊர்காவற்றுறைப் பட்டினசபை எல்லைக்குள் விநியோகம் செய்யப்படும் தண்ணீர் பாவனைக்குப் போதாமையால் அடுத்தமாதம் முதலாம் திகதியிலிருந்து பிரத்தியேகமாக குடிதண்ணீர் விநியோகம் செய்ய ஏற்பாடாகியுள்ளதாக ஊர்காவற்றுறை பட்டினசபைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

## மின்சாரம் கிடைக்கும்

ஊர்காவற்றுறை, வியாழன்

ஊர்காவற்றுறைப் பட்டினசபை எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு அடுத்த வருட முற்பகுதியில் மின்சார விநியோகம் கிடைக்கவிருக்கிறது.

ஊர்காவற்றுறைப் பட்டினசபையினரால் விநியோகிக்கப்படவிருக்கும் இம்மின்சாரம் ஆஸ்பத்திரிவீதி, ஒழுவில் வீதிமூலம் நாரந்தனைப் கிராமசபைக்கு வெளியே முதலில் பாவனைக்கு விடப்படும். அடுத்த வருடம் நாரந்தனை, வேலணை கிராமசபைகளுடன் கலந்தாலோசித்து மின்சாரம் இதரபகுதிகளுக்கும் விநியோகிக்கப்படுமெனத் தெரியவருகிறது.

## உதவித் திட்டத்தில் வெட்டு

வாஷிங்டன், ஜூலை 24

அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோன்ஸனின் அந்நிய நாட்டு உதவித் திட்டத்தில் அமெரிக்க செனேட் வெளிவிவகாரக் கமிட்டி, மேலும் 3 கோடி முப்பது லட்சம் டொலரை வெட்டியுள்ளது.

## வேலைகள் செய்வதற்கு ஆட்களில்லை

ஊர்காவற்றுறை, புதன்

ஊர்காவற்றுறைப் பட்டின சபையாரால், ஊர்காவற்றுறைப் பட்டினசபை எல்லைக்குள் பல திருத்த வேலைகள் செய்வதற்கு பல விண்ணப்பங்கள் கோரப்பட்டும் அந்த வேலைகளைச் செய்வதற்கு கொந்தராத்துக்காரர்கள் விண்ணப்பிக்காததால். குறிப்பிட்ட வேலைகள் நடைபெறவில்லையாம்.

இதனால் பட்டின சபை எல்லைக்குள் உள்ள பல வீதிகள் பலகாலமாக மிகவும் மோசமான நிலையிலுள்ளது. மக்கள் பெரிதும் கஷ்டமடைகின்றனர்.

## சுப்ரீம் கோர்ட்டுக்குப் பாரம்

குரும்பசிட்டி, வியாழன்

சங்கானை குமரேசன் கொலை வழக்கு விசாரணையின் பின்னர் சுப்ரீம்கோர்ட்டிற்குப் பாரப்படுத்தப்பட்டுள்ளது. மூன்று எதிரிகளையும் தொடர்ந்து ரிமாண்டில் இருக்க உத்தரவிட்டமல்லாகம் மாஜிஸ்திரேட் எதிரிகளை உயர்நீதிமன்ற விசாரணைக்கு நிற்குமாறு கட்டளையிட்டுள்ளார்.

சங்கானை நிச்சாமம் வாசியான வல்லிபுரம் செல்லமுத்து என்பவரை இவ்வருடம் ஜனவரி மாதம் 15-ம் திகதி துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்ததாக சங்கானைப் பொலிஸாரால் வன்னியன் சின்னத்தம்பி, பாலன் பசுபதி. ஆறுமுகம் தியாகராசா ஆகியோர் இவ்வழக்கில் குற்றம்சாட்டப்பட்டுள்ளனர்

## நல்லூர் விழா

யாழ்ப்பாணம், வியா.

நல்லூர் கந்தசுவாமி திருவிழா காலத்தில் கார்கள் தெருத்தடைகளிலிருந்து 300, 400 யார் தூரத்துக்கப்பால் நிறுத்தப்படவேண்டியிருக்கிறதென்றும், பல இடங்களில் தெருக்கள் ஒப்புரவாயில்லாதபடியால் இக்குறையை நிவர்த்தி செய்ய வேண்டுமென்றும், வெளிவீதியில் காவணிகளுடன் எவரையும் அனுமதிக்கப்படாதென்றும் டாக்டர் கே. கனகரத்தினம் யாழ்ப்பாணம் பொலிஸ் சுப்ரிண்டெண்டை கோரியிருக்கிறார்.

## படப்பிடிப்பாளர்

யாழ்ப்பாணம், வியா.

அரசாங்க தகவல் படப்பிடிப்பாளர்கள் நேற்று யாழ்ப்பாணம் வந்துள்ளனர். நாட்டின் தேசிய ஐக்கியத்தை வளர்ப்பதற்கும். கல்வி வளர்ச்சிக்கும். வாழ்க்கையிலே ஏற்படுகின்ற உண்மைச் சம்பவங்களை எடுத்துப் படமாக்கிக் காட்டும் பொருட்டு இங்கு வந்துள்ளதாகத் தெரிகின்றது. இவர்கள் யாழ்ப்பாணம் லக்சலா. தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி. அளவெட்டி ஆகிய இடங்களுக்குச் சென்று படம்பிடித்தனர். (நி)


## கூப்பன் தேவையில்லை

யூனிபோம்களுக்கும் கந்தோர் ஷேர்ட்டுகளுக்கும் சிறந்த

**வெள்ளை பொப்ளின்**

ஒரு யார் ரூ. 2/25

ஒவ்வொருவருக்கும் 10 யார் கொடுக்கப்படும்.

நேரில் வருபவர்களுக்கு மட்டும்.

# டயரும்ஸ்

54, பிரதான வீதி, — யாழ்ப்பாணம்






பிரத்தியேகமான மின்காப்புத் தன்மை வாய்ந்த உறுதியான எஸ்-லோன் பீவீசீ குழாய்கள், மின்காப்பு வேலைகளுக்கென அரசாங்க மின்சார இலாகாவினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன.

பொருத்துவதற்கு வசதியும் சௌகரியமும். பிறவற்றை விடப் பாரக் குறைவும், நிலைப்பு வன்மையும், நீடித்த பெறுமதியும் கொண்டிருப்பதால், எஸ்-லோன். வீட்டுப் பாவனைக்கும் தொழில் துறை உபயோகத்துக்கும் இத்துறையில் முற்றிலும் தேவையானதாக அமைகிறது.

S-lon

எஸ்-லோன் — குழாய்த் தொழிலில் அதி சிறந்த இலவச தொழில் நுட்ப ஆலோசனையினதும் சேவையினதும் ஆதாரம் கொண்டது.

[illegible] லிமிட்டட்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூடைப்பந்தாட்ட போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், வியா. யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும், காலை நகர் கடற்படை வீரர்களுக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான கூடைப்பந்தாட்ட போட்டியில், சென். பற்றிக்ஸ் கல்லூரி 59—34 புள்ளி வித்தியாசத்தால் கடற்படை கோஷ்டியைத் தோற்கடித்தது.

இப்போட்டி சென். பற்றிக் கல்லூரி "லோங்கிடலில்" நடைபெற்றது. இப்போட்டிக்கு திரு. ஞானரட்ணம் மத்தியஸ்தம் வகித்தார்.

ஃ ஃ ஃ

வடமாகாண கூடைப்பந்தாட்டச் சங்கத்தினரால் கல்லூரிகளிடையே நடாத்தப்பட்டு வரும், கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில், சென். பற்றிக்ஸ் கல்லூரி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியை 40—19 புள்ளிகள் பெற்று வெற்றி ஈட்டியது. சென். பற்றிக்ஸ் வீரர்கள் பொன்ராஜா 17 புள்ளிகளையும், சத்தியநாதன் 12 புள்ளிகளையும், யாழ்ப்பாணக் கல்லூரி வீரர் பொணி 10 புள்ளிகளையும் பெற்றுக் கொடுத்தனர். இப்போட்டிக்கு திருவாளர்கள் பத்தூர்குலசிங்கியும், தவராஜாவும் மத்தியஸ்தம் வகித்தனர்.

ஃ ஃ ஃ

வடமாகாண கூடைப்பந்தாட்டச் சங்கத்தின் சுற்றுப் போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியை 26—9 புள்ளிகள் பெற்று வெற்றியீட்டியது. இப்போட்டிக்கு திருவாளர்கள் ஞானரட்ணமும், யோகன் சுவாம்பிள்ளையும் மத்தியஸ்தர்களாக கடமையாற்றினர்.

ஃ ஃ ஃ

வடமாகாண கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில், சென். ஜோன்ஸ் கல்லூரியும், யாழ். மத்திய கல்லூரியும் கலந்து கொண்டன. இவ் ஆட்டத்தில் இரு கல்லூரிகளும் திறமையாக விளையாடிய போதிலும், சென். ஜோன்ஸ் கல்லூரி 20—18 புள்ளிகள் வித்தியாசத்தால் யாழ். மத்திய கல்லூரியைத் தோற்கடித்தது.

ஃ ஃ ஃ

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி எதிர்க் கல்லூரியை மிக இலகுவாக 54—9 புள்ளிகள் வித்தியாசத்தால் தோற்கடித்தது.

ஃ ஃ ஃ

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற போட்டியில், யாழ்ப்பாணக் கல்லூரி, மத்திய கல்லூரியை 31—16 புள்ளிகள் வித்தியாசத்தால் தோற்கடித்தது.

(தே. தி)

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வியா. 25—7—68

[செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00]

344 மீற்றர் அல் 61 மீற்றர் காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45 அதிப்பாடல்கள், 7-30 குரல்வளை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 அல்ட் 49 மீட்டர் 10-00 மட்டக்களப்பு அமிர்தகளிமாமங்கப்பிள்ளையார் தீர்த்தம் அஞ்சல்.

344 மீற்றர் அல் 49 மீற்றர் பகல் 12-00 சித்திரகானம் 1-00 தேர்ந்த இசை.

344 மீற்றர் அல் 61 மீற்றர் மாலை 5-00 பிறந்தநின வாழ்த்துகள், 5-30 வளரும் பயிர் இல 80.

இரவு 6-15 சங்கீத பாராயணம், 6-30 விளையாட்டுப் பற்றிய உரை, 6-45 பாவளம் 7-00 இராமசஞ்சிகை, 7-30 விவேகச்சக்கரம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 செய்திச் சுருக்கம், 9-45 நாதசுரம்

## அறிவித்தல்

திரு. க. வேலுப்பிள்ளை, மந்திகைஸ்தாபனத்தால் இழுக்கப்பட்ட பரிசுகள் பின்வருமாறு:—

1ம் பரிசு-11 R 001748 ரூபாய்-50/-

2ம் பரிசு-19 B 001576 ரூபாய்-25/-

3ம் பரிசு-39 O 000360 ரூபாய்-10/-

896

# அத்தியார் இந்து, சிதம்பரா வெற்றி பெற்றன

யாழ்ப்பாணம், வியா. யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகளுக் கிடையில் நடாத்தப்பட்டு வரும் கரப்பந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டியில், அத்தியார் இந்துக் கல்லூரியும், சந்திரபுர ஸ்கந்தவரோதய கல்லூரியும் கலந்து கொண்ட ஆட்டத்தில் அத்தியார் இந்துக் கல்லூரி வெற்றி பெற்றது.

இப்போட்டி தொடக்கம் முடிவடையும் வரை ரசிப்பாகவே காணப்பட்டது. இரு கோஷ்டியினரும் மிக கடுமையாகவே போட்டியிட்டனர். ஆட்ட முடிவில் அத்தியார் இந்துக் கல்லூரி 15—12, 18—16 புள்ளிகளால் சந்திரபுர ஸ்கந்தவரோதய கல்லூரியைத் தோற்கடித்து, இறுதிப் போட்டியில் கலந்து கொள்ள தகுதிபெற்றது.

வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரிக்கும், பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற மற்றுமொரு போட்டியில் வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி வெற்றி பெற்றது. சிதம்பராக் கல்லூரி கோஷ்டியின் 'மின்னல் அடிகளை' எதிர்க் கோஷ்டியினரால் சமாளிக்க முடியாத நிலையில் நின்றனர். ஆட்டமுடிவில் பண்டத்தரிப்புக் கல்லூரி கோஷ்டியை சிதம்பராக் கல்லூரிக் கோஷ்டி, மிக இலகுவாக 15—4, 15—4 புள்ளிகளால் வெற்றி பெற்று. இறுதிப் போட்டியில் கலந்துகொள்ள தெரிவு செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் சிங்கள மத்தியமகா வித்தியாலயத்தில் நடைபெற்ற இவ்விரு போட்டிகளுக்கும் திரு. சிவரத்தினம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

(தே. தி)

# யாழ்: நகரில் நுளம்பு தொல்லை ஒழிக்கப்படும்

யாழ்ப்பாணம், வியாழன் நுளம்புத் தொல்லையை ஒழிக்க, யாழ்ப்பாண நகரிலுள்ள முக்கிய இடங்களிலுள்ள வடிகால்களுக்கு டி. டி. ரி. தெளிக்கப்படும். குறிக்கப்பட்ட கட்டணம் செலுத்தினால் டி. டி. ரி. தெளிக்கப்படும்.

யாழ்ப்பாணத்தில் நுளம்புத் தொல்லையை ஒழிப்பது பற்றி யாழ். மாநகரசபை ஆணையாளர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது.

பகிரங்க சுகாதார வைத்திய அதிகாரி திரு. சி. வீரசிங்கம் சுகாதாரப் பரிசோதகர் திரு. கி. இராசரத்தினம், மராமத்து அத்தியட்சகர் திரு. ஏ. செல்வத்துரை ஆகியோர் பிரசன்னமாயிருந்தனர்.

விஷயங்களை ஆராய்ந்த பின்னர் பின்வருமாறு நுளம்புத் தொல்லையை ஒழிக்க நடவடிக்கை எடுப்பதென்று தீர்மானிக்கப்பட்டது.

வடிகால்கள் திட்டமிட்டபடி கட்டப்படவில்லை. கட்டப்பட்ட வடிகால்களும் பிரதான வடிகாலோடு இணைக்கப்படவில்லை. அநேக வடிகால்கள் தண்ணீர் போகக்கூடிய சரிவில் கட்டப்படவில்லை. இதனால் தண்ணீர் ஆங்காங்கே தேங்கி நிற்கின்றது. வின்ஸர் படமாளிகைக்குப் பின்னாலுள்ள வடிகால் அடைபட்டுள்ளதால் தண்ணீர் தேங்கி நுளம்பு உற்பத்தியாகின்றது. இதேபோல் வட இலங்கைக் கூட்டுறவுச் சம்மேளனத்தின் கட்டிடத்துக்குப் பின்னாலும் மண்போட்டுக் காணி மூடியிருப்பதனாலும் தண்ணீர் தேங்கி நின்று நுளம்பு உற்பத்தியாகின்றது. இவைகளைத்தையும் நேரில் சென்று பார்வையிடவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. இடையில் இவற்றுக்கு டி. டி. ரி. யும், எண்ணெயும் அடிக்க ஏற்பாடுசெய்யப்பட்டது.

(த. தி)

## வரி விளம்பரம்

### நன்றிகூறல்

இராமநாதன் - சரோஜாதேவி. எங்கள் திருமண வைபவத்திலும் வரவேற்பு வைபவத்திலும் பங்கு பற்றிய சுற்றத்தவர், நண்பர்களுக்கும் மற்றும் வாழ்த்துச் செய்தி அனுப்பியவர்களுக்கும் வேறுவிதத்தில் உதவி புரிந்தவர்களுக்கும் எமது நன்றி. தனித்தனியாகநன்றி கூற இயலாமைக்கு வருந்துகின்றோம். சுஸ்வரி வாசா, உடுவில் கிழக்கு சுன்னாகம். 1266


வின்ஸர் வெண்திரையில்

தினசரி 4 காட்சிகள்

எம். ஜி. ஆர். — பி. சரோஜாதேவி

பி. எஸ். வீரப்பா, ஜெயலலிதா, நாகேஷ்

ஆகியோர் நடித்த

அரச கட்டளை

மகிழ்ச்சிகரமான 2வது வாரம்!

ராஜா (யாழ்ப்பாணம்)

தினசரி 2-30, 6-30, 9-30

போயாதினங்களில் காலை 10-30 மணி

ரகுநாதன் சந்திரகலா தங்கவடிவேல் நடித்த

நிர்மலா

எவி.ரி.ஆர். பிலிம்ஸ் வெளியீடு.

மானிப்பாய் வெஸ்லி சினிமா

தினசரி: 6-30, 9-30

விடுமுறைதினங்களில் 2 30.

ரவிச்சந்திரன் ஜெலயலிதா நடித்த

குமரிப்பெண்

ராணி (யாழ்ப்பாணம்)

ஜெமினி — சரோஜாதேவி

நாகேஷ் — விஜயநிர்மலா

நடித்த

பணமா பாசமா

MANOHARA JAFFNA

Daily at 2-30, 6-30, 10-00 p.m.

Poya Days 10-30 A.M.

Rajendra Kumar & Sathana in ARZOO [Hindi] [Eastman color]

ஆர்ஸூ [ஹிந்தி]

Music:- Shanker, Jeikashian.

REGAL JAFFNA

Daily at 4-45, 7-00 & 9-45 P. M.

Alex Cord

Shirley Eaton

in

THE SCORPIO LETTERS

கெபிட்டல் பிளாஸா மைலன் (கொழும்பு)

விஜயா [மட்டுநகர்] ராஜ் [நீர்கொழும்பு] ஸ்ரீகிருஷ்ணா [திருமலை]

★ ரவிச்சந்திரன்

★ ஜெயலலிதா

மனோரமா-நாகேஷ்-முத்துராமன்

பேபி பத்மினி-மனோகர்

நடித்த

ஸ்ரீ விநாயகா பிக்சர்ஸ் நான்

இங்ஸ்லி [கொழும்பு]

2.00 மாலை 6.00, 9.30.

★ ஜெமினி கணேசன்

★ சரோஜாதேவி

★ தங்கவேலு

நடித்த

கல்யாணப்பரிசு

இப்பொழுது திரையிடப்படுகிறது!

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி பி. ப. 2-30, மாலை 6-30, 10-00.

★ ஜெய்சங்கர்

★ எல். விஜயலக்ஷ்மி

★ மனோகர்

நடித்த

வல்லவன் ஒருவன்

தேவை

தினசரி 500 முதல் 1000 றுத்தல் வரை

மரவள்ளிக்கிழங்கு

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா பகுதிகளிலிருந்தும் வாங்கலாம்

ஸ்ரீலங்கா ரப்பியோகா புறடக்ஸ்

தொடர்பு கொள்ளுங்கள்:-

சுந்தரம் பிறதர்ஸ்,

73, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இ. தொ. கா. வாலிபஇயக்க தலைவரின் கேள்வி

வவுனியா, திங்கள்

"தற்சமயம் கொழும்பிலும் கண்டியிலும் விசாரணை செய்யும் பிரஜா உரிமை விசாரணை கச்சேரிகளில் நடத்த ஒழுங்கு செய்யுங்கள். வடமாகாணத்தில் வாழும் நாடற்ற மக்கள் 26000பேர் குடும்பத்துடன் விசாரணைக்காக கொழும்புக்குப் போக வேண்டியுள்ளது. குடும்பத்தில் பத்துப் பேர் இருந்தாலும் எல்லோரும் விசாரணைக்குப் போக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. இதனால் தொழிலாளர்களும் குறிப்பிட்ட காலங்களில் பாதிக்கப்படுகிறது.

இவ்வாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வாலிப இயக்கத் தலைவர் திரு. வே. நடேசபிள்ளை பிரதமமந்திரி திரு. டட்லி சேனநாயகாவுக்கு அனுப்பியுள்ள மகஜரொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

இதன் பிரதிகளை, வவுனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம், இ. தொ. காங்கிரஸ் தலைவர் திரு. எஸ். தொண்டமான், குடியேற்ற வெளியேற்ற இலாகா அதிகாரி திரு. ஜெயசிங்கா ஆகியோருக்கு அனுப்பிவைத்துள்ளார்.

## 'கூட்டுமுறைமூலமே பொருளாதாரம் முன்னேறும்'

சுன்னாகம், புதன்

"நமக்குள்ளே பழம் கதைகளையே இன்னும் நாம் பேசிக் கொள்வதில் திருப்திகாண்கிறோம். ரஷ்யாவும் மற்றும் மேலை நாடுகளும் திட்டமிட்ட பொருளாதார முறைகளைப் பின்பற்றி கூட்டுப் பண்ணை கூட்டுறவான முறையில் இயங்குவோமாகில் எமது பொருளாதார நிலைமேம்படும்."

இவ்வாறு திரு. வி. பொன்னம்பலம் சுன்னாகம் பட்டின சபை நூல் நிலையக் கருத்தரங்கில் குறிப்பிட்டார்.

"விவசாயத்திற்கு பாசன வசதி அவசியம். ரஷ்யாவிலே பல ஆயிரம் மைல்களுக்கு எண்ணெய் அனுப்பப்படுகிறது. எமது நாட்டில் சில நூறு மைல்களுக்கு ஏன் மகாவலி கங்கையைத் திருப்ப முடியாது" என்றார் அவர்.

## ஒரு பாடசாலைக்கு இரு அதிபர்கள்!

அனலைதீவு, புதன்

ஒருவருடகாலமாக அதிபரின்றி இயங்கிவந்த ஆங்கில மகாவித்தியாலயத்திற்கு இரண்டு அதிபர்களை அனுப்பியுள்ளனராம் கல்வி இலாகாவினர். அனலைதீவு சதாசிவ ஆங்கில மகாவித்தியாலயத்திற்கு 2 வாரங்கட்கு முன்னர் ஒரு அதிபரும், சில தினங்களுக்கு முன்னர் மற்றொரு அதிபரும் இடமாற்றம் பெற்று வந்துள்ளனராம்.

யாழ்ப்பாணம் கனகரெத்தினம் மகாவித்தியாலயத்திலிருந்து பதவிஉயர்வு பெற்று இடமாற்றம்பெற்ற திரு. இர. ஐயா, அராலி தெற்கு சரஸ்வதி மகாவித்தியாலயத்திலிருந்து இடமாற்றம்பெற்ற திரு. வி. விஸ்வலிங்கம் ஆகியோரே இங்கு கல்வி இலாகாவினரால் அனுப்பப்பட்டுள்ள இரண்டு அதிபர்களாவர். யார் நிர்வாகத்தைக்கொண்டு நடத்துவதெனத் தெரியாமல் திண்டாடுகிறார்களாம் இவ்விரு அதிபர்களும்.

## இன்று

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயத்தில் 7-ம் திருவிழாவாகிய இன்று காலை 9 மணிக்கு வசந்தமண்டப பூஜையும், மாலை 6 மணி முதல் இரவு 7-30 மணிவரை திருப்பூங்குடி திரு. வி. க. ஆறுமுகம் ஆசிரியர் அவர்களால் "காஞ்சன மாலையார்" என்னும் பொருள்பற்றிய பிரசங்கமும், இரவு 7-30 மணிக்கு வசந்த மண்டப பூஜையும் நடைபெறும்.

## விவசாய கடன் பற்றி ஆராய்வர்

வவுனியா, புதன்

வவுனியா மாவட்டத்தில் எதிர்வரும் காலபோக வேளாண்மைக்கு விவசாயிகளுக்குக்கொடுக்கும் கடன், பசளை, உரம் போன்றவை பற்றி ஆராயும்பொருட்டு வவுனியா அரசாங்க அதிபரும், மாவட்ட விவசாய அதிபர் திரு. பி. மாணிக்கவாசகரும் சகல காரியாதிகாரி பிரிவிலும் கூட்டங்கள் நடாத்துமாறு அறிவித்துள்ளனர்.

## வவுனியா பொலிஸ் நிலையத்தின் நிலை

வவுனியா, புதன்

வவுனியா பொலிஸ்நிலையத்தில் கடந்த 3 வருடகாலமாக தட்டச்சு இயந்திரம் இல்லை. இதனால் அவர்கள் தினமும் வவுனியாவிலுள்ள தனிப்பட்ட வர்த்தக ஸ்தாபனத்தாரின் உதவியை நாடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதன்காரணமாக பலர் மீது குற்றப்பத்திரிகைகள் சமர்ப்பிப்பதற்கு காலதாமதம் எடுப்பதாகவும் அறியப்படுகின்றது.

## மாவை தேர்......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் எல்லோரும் அவரை ஆவலோடு பார்த்தனர்.

திரு. சுந்தரலிங்கம், திருவிழாக்கள் முடிந்த பின்னரே வவுனியாவுக்குச் செல்வார் எனத் தொண்டர் ஒருவர் கூறினார்.

இன்று அதிகாலை 1 மணிக்கு சுவாமி கீரிமலை நோக்கிப் புறப்பட்டு, அதிகாலை 5 மணிக்குத் தீர்த்தோற்சவம் நடைபெறும். மாலை 5 மணிக்கு சுவாமி கீரிமலையிலிருந்து புறப்பட்டு கோயிலை வந்தடையும். நாளை மாலை நடைபெறும் மாம்பழத் திருவிழாவுடன் வருடாந்த உற்சவம் நிறைவுபெறுகின்றது.

## கருணாநிதிக்கு கண் வலி

சென்னை, ஜூலை 24

தமிழக பொதுப்பணி அமைச்சர் திரு. மு. கருணாநிதிக்கு கடந்த 3 தினங்களாக கண்வலி ஏற்பட்டுள்ளது. வழக்கத்துக்கு மாறாக நேற்று அவர் இங்கு நடைபெற்ற தமிழரசுக்கழக மகாநாட்டில் பேசிக்கொண்டிருக்கையில் "கறுப்புக்கண்ணாடி" அணிந்திருப்பதற்கு கண்வலியே காரணமென அவரே தெரிவித்தார்.

## அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், வியாழன்

உருத்திரபுரம் - கதிராமம் எழுமலை மாணிக்கப் பிள்ளையார் கோவில் அலங்கார உற்சவம் இன்று ஆரம்பமாகி தொடர்ந்து 15 நாட்களும் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். திருவிழாக் காலங்களில் வழமைபோல் சிவனடியார் சு. வேலாயுதசுவாமி மௌன விரதம் அனுஷ்டிக்கவிருக்கிறார்.

'படகுவிபத்துபற்றி

## விசாரணை நீதிக்குழு வேண்டும்'

நயினாதீவு, புதன்

நயினாதீவில் நடைபெற்ற படகுவிபத்து சம்பந்தமாக பகிரங்க விசாரணை நீதிக்குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும் என்றும் மேலும் இப்படியான விபத்துக்கள் நடைபெறாதிருக்க எவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அரசாங்கத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும்கோரும் மகஜர் ஒன்றை நயினாதீவு தெற்கு கிராம முன்னேற்றச் சங்கத்தினர் வடமாகாண அரசாங்க அதிபருக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

இதுசம்பந்தமாக தகுந்த நடவடிக்கை எடுக்கக்கோரும் பிரேரணை ஒன்றையும்நயினாதீவு கிராமசபை அங்கத்தவர் திரு. அ. நல்லையா நயினாதீவு கிராமசபையிற் சமர்ப்பித்துள்ளனர்.

## கடலில் தங்கம் உருவாகிறது

மாஸ்கோ, ஜூலை 25

சோவியத்யூனியனில் வடகிழக்குப் பகுதியிலுள்ள சுக்கோட்காவில் புவியலாளர்கள் முதலாவது தங்க வளத்தினைக்கண்டுபிடித்துள்ளனர். ஆர்டிக் சமுத்திரத்துக்கு சமீபமாகவுள்ள கடலில் இத்தத் தங்கவளத்தினைக் கண்டுபிடித்தனர். இதுகடலிலேயே உருவாக்கப்பட்டிருக்கலாம் என நிபுணர்கள் நம்புகின்றனர்.

## 28-ம் திகதிவரை ஒத்திவைப்பு

குரும்பசிட்டி புதன்

கட்டுவனைச்சேர்ந்த முருகேசு செல்லத்துரை என்பவரை இவ்வருடம் பெப்ரவரி மாதம் 17ம் திகதி கத்தியால் வெட்டிக்கொலை செய்ததாக வீரசிங்கம் தம்பிராசா என்பவருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் பதில் நீதிபதி திரு. ஜீ. வி. பாலசிங்கம் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது எதிரியை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட மல்லாகம் நீதிபதி விசாரணையை இம்மாதம் 28-ம்திகதிக்கு ஒத்திவைத்தார்.

## காங்கேசன்துறை பட்டினசபை ராஜாங்க அமைச்சருக்கு கோரிக்கை

அளவெட்டி, புதன்

பொதுமக்கள் முறையீடுகள் யாவும் அவரவர்களால் கொடுக்கப்படும் மொழியிலேயே பதிவுசெய்தல் வேண்டுமென நகர்காவலர் மா அதிபரின் சுற்றிக்கையை உதாசினம் செய்கிறார்கள் காங்கேசன்துறைப் பொலிசார், என காங்கேசன்துறைப் பட்டின சபை மகாநாதக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

இம்மாதாந்தக்கூட்டத்துக்கு ஆ. வ. சதாசிவம் தலைமைவகித்தார். மேற்படி பிரேரணையைப் பிரேரித்துப் பேசிய உபதலைவர் ச. சிவனடியார் சுன்னாகம், சங்கானை, மல்லெட்டித்துறை, பருத்தித்துறை ஆகிய உப நகர்காவலர் நிலையத்துக்கு தலைமை நகர்காவலர்நிலையமாக எமது பட்டினத்தில் நெடுநாளாக அமைக்கப்பட்டது மட்டுமின்றி பொதுமக்களால் கொடுக்கப்படும் மொழிகளிலேயே அவர்களது முறைப்பாடுகள் பதிவு செய்யப்படுவதுமில்லை என்றும் இதனால் பொதுமக்கள் நீதிமன்றத்தில் வழக்குகளை நடாத்தவும் இலகுவாக இருந்துவந்திருக்கிறது என்றும் நகர்காவலர் தாம்விரும்பிய மொழியில் பொதுமக்கள் முறைப்பாடுகளைப் பதிவு செய்து மக்களுக்கு துன்பம் செய்துவருகின்றனர். உதாரணமாகஎங்கள் சபைஎல்லைக்குள்ளிருக்கும் நகர்காவலர் நிலையத்தில் சுமார் 8 க்கு மேற்பட்ட தமிழ் தெரிந்தவர்கள் இருந்தும் முறைப்பாடுகள் செய்வதற்கு தமிழ் தெரியாத நகர்காவலர் அமர்த்தப்பட்டிருக்கிறார்களென்றும் கூறினார்.

மேற்படி செய்கையினை இச் சபை வன்மையாகக் கண்டிப்பதுடன் மேற்படி முறையீடுகள் யாவையும் அவர்களால் கொடுக்கப்படும் மொழிகளில் பதிவு செய்வதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கும்படியும் பொதுமக்கள் தங்களுக்கு ... கப்படும் முறையீடுகளை அவர்களிடமிருந்து பெற்றுப் பதிவுசெய்வதற்கும் ஆவனசெய்யும்படி இச்சபை ராஜாங்க மந்திரியையும், காங்கேசன்துறை பாராளுமன்ற உறுப்பினரையும் கேட்டுக்கொள்ள வேண்டுமென்றும் அவர் எடுத்துக் கூறினார்.

இத் தீர்மானத்தை ராஜாங்க மந்திரிக்கும், காங்கேசன்துறை பாராளுமன்ற உறுப்பினருக்கும் அனுப்புவதென ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

## உலகச் செய்திகள்

### தீர்வுக்கு நாஸர் விருப்பம்

கெய்ரோ, ஜூலை 24

மத்திய கிழக்கு நெருக்கடிக்கு அரசியல் தீர்வு ஏற்படுவதைத் தாம் விரும்புவதாக இன்று ஐக்கிய அரபுக் குடியரசு ஜனாதிபதி கேர்ணல் நாஸர் தெரிவித்தார். இந்தத்தீர்வுக்கு இஸ்ரேல் இணங்காவிட்டால் ஏற்படும் விளைவுகள் பாரதூரமாக இருக்குமென்பதில் சந்தேகமில்லையென்றார்.

### 14-வது தடவையாக கூடியது

பாரிஸ், ஜூலை 24

வியட்னாம் சமாதானப் பேச்சுவார்த்தை இன்று 14-வது தடவையாக நடைபெற்றது. வியட்காங்கின் வன்செயல்கள் குறித்து வன்மையாகக் கண்டித்தார், அமெரிக்க தூதுக்குழுத் தலைவர்.

### "தவறுக்காக வருந்தலாம்"

புதுடில்லி, ஜூலை 24

"சோவியத் யூனியன் தன் தவறுக்காக எதிர்காலத்தில் வருந்தக்கூடும்" என்று இன்று இந்தியப் பிரதமர் ஸ்ரீமதி இந்திராகாந்தி கூறினார். பாகிஸ்தானுக்கு ரஷ்யா ஆயுதம் விற்பனை செய்வது சம்பந்தமாகத் தெரிவிக்கையிலேயே அவர் இப்படியாகச் சொன்னார்.

## தாய்லாந்து சென்றார்

யாழ்ப்பாணம், புதன்

காங்கேசன்துறை கருகம்பனையைச் சேர்ந்த திரு. பி. ராஜேந்திரன் தாய்லாந்து நாட்டுக்குச் சென்றுள்ளார். டாக்டர் பி. பொன்னம்பலம் ஜே. பி. யின் மகனான இவர் பாங்கொக்கில் கடமையாற்றுவதற்காக அங்கு சென்றுள்ளார். /ந. நி.

## குன்றுக்குள் புத்தர்சிலை

தஷ்கெண்ட், ஜூலை 24

மத்திய ஆசியாவில் தாஜிகிஸ்தானிலுள்ள அத்ஜினதேபே குன்றைத்தோண்டிய ஆய்வாளர்கள் மாபெரும் புத்தர் சிலையின் தலையை அகழ்ந்து எடுத்துள்ளனர். இங்கே 6—7-ம் நூற்றாண்டுகளுக்கு முந்திய புத்தமடாலயம் புதைந்து கிடக்கிறது.


## ஒரு நற்செய்தி

தமிழிலும் ஆங்கிலத்திலும்
சகலவித அச்சு வேலைகளும்
செய்வதற்கு

ஈழநாடு அச்சகம்

பூரணமான நவீன சாதனங்களைக்
கொண்டுள்ளது என்பதை
மகிழ்ச்சியுடன்
தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

சகலவேலைகளும் திருப்திகரமாகவும்,
சிறப்பாகவும் குறித்த நேரத்தில் செய்து
கொடுக்கப்படும்.

விபரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும்

ஈழநாடு லிமிட்டெட்,

63; சிவன்கோவில் மேற்கு வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 389


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு ஜூலை மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org